# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக, என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார். மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்" என்றார் (மத் 14:28-33)




## சுதந்திர மற்றும் மலேசிய தினக் கொண்டாட்டத்தையொட்டி பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் வாழ்த்துச் செய்தி

நமது 63-வது சுதந்திர மற்றும் 57-வது மலேசிய தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான காலத்தில் அனைத்து மலேசியர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டின் கருப்பொருள் 'பரிவுமிக்க மலேசியா' என்பதாகும். இது நாட்டுப்பற்று, ஒற்றுமை மற்றும் நாட்டின் மீதான அன்பு ஆகியவற்றின் மீது கொண்ட உணர்வின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. இது கோவிட்-19-ஐ எதிர்த்துப் போராடுவதில் நாட்டு மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் அடையாளமாகவும் அமைகிறது எனலாம்.

இந்த ஆண்டு தீவிரமான மாற்றங்களைச் செய்யத் தூண்டிய ஆண்டாக இருந்தது என்பது பலருக்கு நினைவிருக்கலாம். நமது பல திட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டு, திட்டமிடப்பட்ட நமது நிகழ்ச்சி நிரல்கள் நீக்கப்பட்டு, நண்பர்களும் குடும்ப உறுப்பினர்களும் பிரிந்திருந்த நிலையில், புதிய வாழ்க்கை விதிமுறைகளுக்கு ஏற்ப தீவிரமான மாற்றங்களைச் செய்ய வேண்டிய சூழலில், கடவுள் எங்கே? என்று கேள்வி கேட்பது இயல்பான ஒன்றானது. கடவுள் இன்னும் நம்முடன் இருக்கிறார் என்பதில் உறுதியாக இருங்கள். நம் வாழ்க்கை முறை இயல்பு நிலையிலிருந்து மாற்றம் கண்டிருந்தாலும், இந்த தொற்றுநோயால் ஏற்பட்ட புதிய துன்பத்தில் துவண்டாலும், கடவுள் நம்மைக் கைவிடவில்லை. திருப்பாடல் ஆசிரியர் 34:18-ல் கூறியதைப்போல் 'உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார்; நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்.'

இது மலேசியாவிற்கும் பொருந்தும். ஒரு நாட்டின் வலிமையானது அந்நாட்டில் அனைத்தும் சரியாக நடக்கும்போது வெளிப்படுவதில்லை. மாறாக நெருக்கடி ஏற்படும் போதுதான் அதை உணர முடியும். எனவே, இனம், சமயம் அல்லது அரசியல் நம்பிக்கை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், நெருக்கடி காலங்களில் உதவி மற்றும் பேராதரவை வழங்குவதில்தான் மக்கள் ஒன்றுபடுவதைப் பார்க்க முடியும். கோவிட்-19-க்கு எதிரான போராட்டத்தை வழிநடத்தியவர்களுக்கு- குறிப்பாக அனைத்து உடல்நல வல்லுநர்களுக்காகவும், முன்னணியில் பணிபுரிந்தோருக்காகவும் நாம் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் மலேசியர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டதானது, இன்பத்துன்ப வேளைகளிலும் நம்மால் ஒன்றாக வேறுபாடுகள் களைந்து செயலாற்ற இயலும் என்பதை வெளிப்படுத்துகிறது.

பலர் வருமானக் குறைவு, வேலையின்மை போன்றச் சூழலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்பதை நாம் அறிவோம். பொருளாதார பின்விளைவுகள் மலேசியர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த ஆண்டின் 'பரிவுமிக்க மலேசியா' எனும் கருப்பொருளுக்கு ஏற்ப, நாம் நமக்கு அடுத்திருப்பவர்களுக்கு குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள், இந்தத் தொற்றுநோயால் அதிக இழப்பைச் சந்தித்தவர்கள் மட்டில் பரிவிரக்கம் காட்ட வேண்டும். வெளிநாட்டு தொழிலாளர்களில் முறையான ஆவணங்களைக் கொண்டிருப்போர், கொண்டிராதோர், புலம்பெயர்ந்தோர் ஆகிய அனைவரையும் நாம் ஆழ்ந்த பரிவிரக்கத்துடன் கவனிக்க வேண்டும். ஏனெனில், அவர்களும் மலேசியர்களைப் போலவே சமூக பாதுகாப்பு அம்சங்கள் கொண்டிராதக் காரணத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். மனிதநேய அடிப்படையில் அனைவருக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படவும் அனைவரையும் இந்தத் தொற்றுநோய் மீட்புத் திட்டத்தில் இணைக்கவும் நாம் அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

இவ்வாண்டு, நமது தேசிய ஒற்றுமைக்கு வழிகாட்டியான 'ருக்குன் நெகாரா' கோட்பாடுகள் இயற்றப்பட்டதன் 50-ம் ஆண்டு நிறைவை நினைவுகூர்கிறோம் என்பது மற்றொரு மகிழ்ச்சியாகும்..

**1.இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்.**
**2.பேரரசருக்கும் நாட்டுக்கும் விசுவாசம் செலுத்துதல்.**
**3.அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்.**
**4. சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்.**
**5. நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

மேற்கண்ட ருக்குன் நெகாரா கோட்பாடுகள் அனைத்துத் தரப்பு மலேசியர்களிடையே சிறந்த ஒற்றுமை உணர்வை பேணுவதையும் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. மக்களாட்சி வாழ்க்கை முறையை பாதுகாத்தல்; நாட்டின் செழிப்பை நியாயமான மற்றும் சமமான முறையில் ஒன்றாக அனுபவிக்கக்கூடிய ஒரு நியாயமான சமூகத்தை உருவாக்குதல்; பணக்கார மற்றும் மாறுபட்ட கலாச்சார மரபுகளை நோக்கி தாராளமான அணுகுமுறையை உறுதி செய்தல்; அறிவியல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு முற்போக்கான சமூகத்தை உருவாக்குதல் ஆகிய இந்த குறிப்பிடத்தக்க செயல்பாடுகளில், மலேசியாவில் எடுக்கப்படும் அனைத்து கொள்கை முடிவுகளுக்கும், ஒருங்கிணைந்த அடிப்படை கொள்கைத் திட்டங்களுக்குத் தன்னை மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

தொற்றுநோய் நம்மை 'கடவுள் நம்பிக்கை' முன்னிலைக்கு கொண்டு வந்துள்ளது என்பதை மறுக்க இயலாது. இது நம் வாழ்வுக்கான பாதிப்பு மற்றும் கடவுளை நம்புவதில் நமது பொதுவான நிலையை உணர வைத்தது. ஆகஸ்ட் 12-ஆம் தேதி, நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த "தொற்றுநோயானது நாம் அனைவரும் எந்தளவுக்குப் பாதிக்கப்படக் கூடியவர்கள் என்பதையும், அத்தோடு நாம் ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டியவர்கள் என்பதையும் உணர்த்தியுள்ளது" என்பதை நினைவுப்படுத்தினார். நாம் ஒருவரையொருவர் அக்கறையுடன் கவனித்துக் கொள்ளாவிட்டால், மிகச் சிறிய உயிர் அணு தொடங்கி - படைப்பு அனைத்தும் மிகவும் பாதிக்கப்படும் நிலை தலைத்தூக்கும். - உலகை குணப்படுத்த முடியாதச் சூழல் நிலவும்".

இந்த பொதுச் சுகாதார நெருக்கடியின் தொடக்கத்தில், மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒரு முறையான தேர்தல் இன்றி, அரசியல் குறைபாடுகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிவிட்டு கட்சி தாவுதல் போன்ற காரணங்களினாலும் ஏற்பட்ட மாற்றங்கள் மூலம் அரசாங்கம் பெரும் மாற்றத்திற்கு உட்டப்பட்டது. நாடாளுமன்ற அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப மக்களால் தேர்வுச் செய்யப்படாத வகையில் இந்த அரசாங்க மாற்றத்தை நாம் மிக வேதனையுடனும் கண்ணோக்கினோம்.

இது போன்ற நிகழ்வுகள் அதிகாரம் மற்றும் அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் தீய பல விளைவுகளை ஏற்படுத்தும். மேலும், இது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் சமூக, உணர்ச்சி மற்றும் உளரீதியாகவும் நம்மை பாதிக்கிறது. இந்தத் தொற்றுநோயை எதிர்த்துப் போராடி நமது தேசிய பொருளாதாரத்தைப் புதுப்பிக்க நாம் ஒன்றுசேர வேண்டிய இக்காலக்கட்டத்தில், நம் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் பிளவுகள் ஏற்படுவதை ஏற்க இயலாது.

அனைவரும் அவரவர்களின் வேறுபாடுகளையும் அரசியல் சர்ச்சைகளையும் ஒதுக்கி விட்டு, நாட்டுக்கும் அனைத்து மலேசியர்களுக்கும் நன்மை செய்வதற்கு ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று நாம் அழைப்புவிடுக்கிறோம். இது போன்ற காலக்கட்டத்தில், நம்மிடையே நிலவும் மிகச் சிறு சிறு வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் இருப்பது இன்றியமையாததாகும். கூட்டரசு அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள சட்ட விதிகள் மற்றும் ருக்குன் நெகாரா வழி எதிர்பார்க்கப்பட்ட உண்மை நாட்டுப்பற்றானது எந்த அரசாங்கம் நடப்பில் உள்ளது என்பதைப் பொருட்படுத்தாமல் நாடு எப்போதும் மேலோங்கியிருக்க இறைவேண்டல் செய்வோம்.

'பரிவுமிக்க மலேசியா' எனும் கருத்தோட்டம் நம் நாட்டின் தலைவர்களையும், பல்வேறு இனங்கள், கலாச்சாரங்கள் கொண்ட அனைத்து மக்களையும் நாட்டின் சவால்களைச் சந்திப்பதில் தன்னலமின்றி செயல்படவும், மலேசியாவை உண்மையிலேயே ஒன்றிணைந்த மற்றும் நல்லிணக்கம் கொண்ட நாடாக மாற்றுவதற்கு உறுதியான மனநிலையுடன் பாடுபடவும் ருக்குன் நெகாரா கொள்கைகள் நமக்கு வழிகாட்டியாக அமையட்டும்.

சுதந்திர மற்றும் மலேசியத் தினக் கொண்டாட்டம் ஆகிய இந்த இரட்டை கொண்டாட்டத்தில், நமது மாமன்னர், மலாய் ஆட்சியாளர்கள், மத்திய மற்றும் மாநில நிலைகளில் உள்ள அனைத்து அரசியல் மற்றும் பொதுப்பணி தலைவர்கள், மலேசியாவின் அனைத்து மக்களுக்கும் நமது தாழ்மையான இறைவேண்டலை முன்வைக்கிறோம்.

‘ஆண்டவர், அவர் மீது நம்பிக்கை வைக்கும் நமது இதயத்தை அவரது அமைதியாலும் மகிழ்ச்சியாலும் நிரப்புவாராக!’

**பேராயர், ஜூலியன் லியாவ்,**
**கோலாலம்பூர் மாமறைமாவட்டம்.**

# உடல்நலம் தேறிவருகிறார் கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ்

**கோலாலம்பூர்:** டிசம்பர் 2019-ல் வெளியான பேராயர் அலுவலக செயலாலரின் அறிவிப்பின் தொடர்ச்சியாக, கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ் அவர்கள் தற்போது நோயெதிர்ப்பு மற்றும் கதிரியக்க சிகிச்சை (immunotherapy and radiotherapy) பெற்று வருகிறார் என்று பேராயர் அலுவலக தொடர்புத்துறை மற்றும் பல்லூடகப் பொறுப்பதிகாரி பெட்ரிசியா பிரெய்ரா ஒரு சிறப்பு அறிக்கையின் வழி தெரிவித்துள்ளார். அவரது உடல்நிலை பலவீனமாகக் காணப்பட்டாலும் சீராக உள்ளது என்றும் அவர் அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.



மருத்துவமனையில் அவரைச் சந்திக்க தற்போது குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுமதி வரையறுக்கப் பட்டுள்ளதால், அவரின் உடல்நலத்திற்காக இறைவேண்டல் செய்யும் அனைவருக்கும் நன்றிநவிலப்படுகிறது என்று மேலும் கூறினார்.

கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ் அவர்களுக்கு Cardinal.archkl.org வழியாக செய்திகளையும் நல்வாழ்த்துகளையும் அனுப்பலாம் என்றும், பெறப்படும் அனைத்து செய்திகளும் வாழ்த்துகளும் கர்தினால் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுச் செல்லப்படும் என்றும் அவர் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இறைவனின் மீட்புப் பணிக்கு, மலேசிய திருஅவையின் வழி அவர் ஆற்றியப் பணிகளை நினைவுகூர்ந்து, உடல்நலம் தேறிவரும் கர்தினால் சோட்டர் பெர்னாண்டஸ் அவர்களுக்கு அன்னை மரியாவின் பரிந்துரை வேண்டலுக்கும், இறைவனின் தயவுக்கும், பரிவிரக்கத்திற்கும் நம் இறைவேண்டல்களை இடைவிடாதுத் தொடர்வோம்.

கடந்த 19 நவம்பர் 2016-ல் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இவர் மலேசிய திருஅவையின் முதல் கர்தினலாக நியமனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'இலக்கிய உலக இளம்பருவத்தினரும் பெற்றோரும்'

**கோலாலம்பூர்**: கடந்த ஞயிற்றுக்கிழமை மாலையன்று, மலேசியா முழுவதும் பெற்றோர்கள் Zoom வழியாக டாக்டர் வலேரி ஜாக்ஸ் அவர்களின் 'இலக்கிய உலக இளம்பருவத்தினரும் பெற்றோரும்'




(Digital Teenagers & Parenting) எனும் தலைப்பிலான சொற்பொழிவைக் கேட்க 60-க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் இணையத்தளத்துடன் இணைந்தனர்.

மலேசிய தொலைத்தொடர்பு மற்றும் பல்லூடகம் மேற்கொண்ட ஒரு ஆய்வில் 93.5% கைத்தொலைபேசி பயன்படுத்துபவர்கள் 20 வயதிற்குட்பட்டவர்கள் என்றும், பெற்றோர்கள்தான் தங்கள் குழந்தைகளுக்குக் கைத்தொலைபேசி பயன்பாட்டை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடும் என்றும் தெரியவருகிறது என்று அவர் தொடக்கவுரையில் தெரிவித்தார்.

இக்காலத்தில் வயது வரம்பின்றி இலக்கிய (டிஜிட்டல்) தொழில்நுட்பம் அத்தியாவசியமாகிவிட்ட சூலில், இளம் பருவத்தினரை ஒழுக்கத்தோடும் நன்னெறியோடும் வளர்ப்பதில் பெற்றோர்கள் பல சவால்களை எதிர்கொள்ளக்கூடும் எனவும், தேசிய மனநல சுகாதார நிறுவனத்தில் நரம்பியல் அறிவியளாலர் டாக்டர் ஜெய் கெய்ட் அவர்களின் இளம் பருவ மூளை குறித்த ஒரு ஆராய்ச்சியின் முடிவைப் பற்றியும் டாக்டர் வலேரி ஜாக்ஸ் பகிர்ந்து கொண்டார்.

அவர், தொடர்ந்து, இளம் பருவத்தினரிடையே காணப்படும் மூன்று மிகவும் வலுவான நடவடிக்கை மாற்றங்களைப் பற்றி பெற்றோருடன் பகிர்ந்துகொண்டார்.

1 ஆபத்து நிறைந்த சவால்களைச் சந்திக்கத் துணிவது

2.அதிகளவிலான பாலுணர்வு சம்ந்தப் பட்ட நட்புகளை நாடிச் செல்வது.

3. பெற்றோரைத் தவிர்த்து அதிக நண்பர்களை தேடிச் செல்வது.

.இந்த மாற்றங்கள் மனிதர்களில் மட்டுமல்ல, அனைத்து சமூக பாலூட்டிகளிலும் நிகழ்கின்றன, இது தன்னிச்சையான செயல்பாட்டையும் குடும்ப உறவிலிருந்து பிரிவையும் ஊக்குவிக்கிறது என்று அவர் மேலும் அறிவுறுத்தினார். .

டாக்டர் வலேரி ஜாக்ஸ் தொடர்ந்து, டிஜிட்டல் புரட்சியின் மிகப்பெரிய நன்மைகள் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் சமூக மேம்பாடு ஆகிய துறைகளில் அடங்கியுள்ளன என்றும் கூறினார்.

தனித்துவமான கல்வி வாய்ப்புகள், சிறந்த பொழுதுபோக்கு மற்றும் சமூக தொடர்புகளை விரிவுபடுத்துதல் ஆகியவை இலக்கிய டிஜிட்டல் புரட்சியின் சாதகமான விளைவுகள் என்றும், இன்றைய நமது கல்வி முறையை எவ்வாறு மேம்படுத்துவது என்பதற்கான ஆழமான தாக்கங்களை இந்த புரட்சி கொண்டுள்ளாதக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, வீடியோ விளையாட்டுகளுக்காகச் செலவிடும் நேரம் எல்லா வயதினரிடமும் அதிகரித்து வருகிறது என்று கூறிய அவர் ஒரு நியூரோபயாலஜிக்கல் கண்ணோட்டத்தில், வீடியோ விளையாட்டுகளின் வெற்றியானது, நிஜ உலக விளைவுகளை அனுபவிக்காமல் அச்சங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு ஆகியவற்றின் மூலம் செயல்பட இளம் பருவத்தினரை தூண்டுகிறது என்றும் அவர் மேலும் கருத்துரைத்தார்..

# ஞாயிறு வாசகத் தியானம் 'பற்றற்றானைப் பற்றுவோம்'

கடந்த வார நற்செய்தியிலிருந்து இன்றைய நற்செய்தி தொடர்கிறது. பேதுருவை 'பாறை' என அழைத்து, இந்தப் பாறையின்மேல் என் திரு அவையைக் கட்டுவேன் என இயேசு புகழாரம் சூட்டுவார். உச்சி குளிர்ந்து தணியும் முன்பே, பேதுருவை கணிந்துகொள்கிறார் 'சாத்தானே என் கண் முன் நில்லாதே' என சற்று கடினமாக பேதுருவைத் தீட்டுகிறார்.

தமது மண்ணுலகப் பணியின் நோக்கத்தையும் இலட்சியத்தையும் இயேசு சீடர்களுக்கு எடுத்துரைத்து, மூப்பர்கள், தலைமைக்குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் துன்பப்படுத்தப்பட்டு கொலை செய்யப்படவிருப்பதை முன்னறிவிக்கிறார். புகழ்ச்சியின் மமதையில் இருக்கும் பேதுரு, குருவுக்கே (இயேசு) மாற்று வழி காண்பிக்கிறார். இயேசு ஆட்சி அமைக்கும் போது அதிகாரத்தில் அமரலாம் என கனவு கண்ட பேதுரு இயேசு கனவுக்குத் தடைபோடுகிறார்.

ஆனால் இயேசுவோ, 'என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு' (யோவான்4:34) என்பதில் உறுதியாக இருக்கிறார். பேதுருவின் எண்ணத்தை மறுத்துக் கண்டிருக்கிறார்.

இன்றைய வாசகத்தின் கதாநாயகனாக இருக்கும் பேதுருவின் நல்லெண்ணத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம். இயேசுவின் எண்ணத்திற்கும் இலக்குக்கும் மற்று கருத்துத் தெரிவிக்கும் பேதுரு, அவரைத் தனியே அழைத்துச் செல்கிறார். இயேசுவின் எண்ணத்திற்கு மாற்று கருத்துத் தெரிவிக்கிறார். ஆனாலும், அவரது எண்ணப்படி, இயேசுவின் தன்மானத்தை மதித்து, பிறர் முன்னிலையில் அவரது எண்ணத்தைச் சுட்டிக்காட்ட பேதுரு விரும்பவில்லை.

மேலும், தன்னை 'சாத்தான்' என இயேசு பழித்துரைத்தப் போதும் பேதுரு அவரை விட்டு விலகவில்லை. தமது தவற்றை ஒப்புக்கொண்டார். பின்பு இயேசுவை தெரியாது என மறுத்தலித்த வேளையிலும், தமது தவற்றை பின்னர் ஒப்புக் கொண்டு, திரு அவைக்குத் தலைமையேற்று பணியைத் தொடர்ந்தார். . சில வேளைகளில் நாமும் பேதுருவைப் போல், நல்லெண்ணத்தோடு தவறு செய்து விடுகிறோம். நம்மிடம் தூய ஆவியானவர் குடிக் கொண்டிருக்கிறார், வழிநடத்துகிறார் என மார்த்தட்டிக்கொண்டு தவறுகளைச் செய்கிறோம். அல்லது சோதனைகளுக்கு ஆளாகி விடுகிறோம்.

அதனால்தான், 'எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்'(மத்.6:13) என நாம் அன்றாடும் மன்றாட வேண்டும் என்கிறார் இயேசு
.

முதல் வாசகத்தில் (எரே.207-9), இறைவாக்கினர் எரேமியா பழிச் சொல்லுக்கு ஆளானாலும், ஆண்டவரனின் வாக்கை எடுத்துரைப்பேன் என உறுதி கொண்டது போல், பேதுருவும் உறுதியோடு இருந்தார். 'என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்' (மத்.17:24) என இயேசு கூறிய அடுத்த வார்த்தையைக் கேட்டு, பேதுரு மனவுறுதி கொண்டார். 'கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்' (உரோ.12:1-2) என இரண்டாம் வாசகம் கூறுவதற்கேற்ப, நற்செய்திக்காக தமது உயிரையேப் பணயம் வைத்து, சிலுவையில் தலைகீழாக தொங்கினார் பேதுரு.

பற்று இல்லாத பற்றற்றானை (இறைவனை) அடைய வேண்டும் என்றால் பற்று (தன்னலம்), பேராசை அனைத்தையும் துறக்க வேண்டும் (குறள் 350) என்பதையும் 'கடவுளே, உன் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது' (திப.63) என்பதையும் கருத்தில் கொண்டு அப்போது நாம் துணிவோடு செயல்பட வேண்டும்.

ஆகவே கிறிஸ்தவர்களாகிய நாம் துன்பங்களைத் துணிவோடு தாங்கிக் கொண்டு இயேசுவின் பின்னால் செல்லவேண்டும். எனவே நாம் மனித விருப்பமான இன்பமயமான வாழ்க்கை வாழ நினைக்காமல், இறை விருப்பமான சவால்கள் நிறைந்த வாழ்க்கையைத் துணிவோடு தேர்ந்துகொள்வோம்

சிலுவையே தமது நிலைவாழ்வான சிம்மாசத்திற்கான வழி என்பதை உறுதியாக ஏற்போம்.

*-அந்தோனி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்*

**பொதுக்காலம் 22-ஆம் ஞாயிறு**

எரே 20: 7-9
திபா 63: 1. 2-3. 4-5. 7-8.
உரோ 12: 1-2
மத் 16: 21-27

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**

**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் I**